மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 60/2017 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | ராஜத்திமணி | நாள் | 03.11.2023 |
| கணவர் பெயர் | மணி | | |

**1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா 2 ஐ குறுக்கு விசாரணை:-**

1) தற்போது நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால், நான் தற்போது ஆஸ்பத்திரி காலனி மேட்டுரில் குடியிருக்கிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பள்ளி படிப்பே படிக்கவில்லை. இந்த வழக்கை யார் யார் தாக்கல் செய்துள்ளோம் என்றால், நான் மட்டும்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். யாருக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், செங்கோடன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். குறிப்பாக என்னால் பெயர் சொல்ல இயலாது.

2) தாவா சொத்து சம்பந்தமாக என் கணவர் பெயரில் என்னென்ன ஆவணங்கள் உள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. எந்த தேதியில் நான் என் கணவருக்கு பொது அதிகார ஆவணம் எழுதிகொடுத்துள்ளேன் என்றால், எனக்கு தேதி, மாதம், வருடம் சரியாக நினைவில்லை. மேற்படி பவர் ஆவணத்தில் என்ன சரத்துக்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால், எனக்கு படிப்பறிவு இல்லாததால் அது குறித்து எனக்கு தெரியவில்லை.

3) தற்போது மேற்படி பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்துவிட்டேனா என்றால் இல்லை. நடைமுறையில் உள்ளது. மேற்படி பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்யாமல் நான் நீதிமன்ற சாட்சியம் அளிக்க இயலாது என்றால், சரியல்ல. என் கணவருக்கு நான் பொது அதிகார பத்திரம் அளித்துள்ளதால், அவர் தான் இவ்வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க இயலும் என்றாலும், தற்போது மேற்படி பொது அதிகார ஆவணத்தின் முதல்வராகிய நான் நீதிமன்றத்தில் தனி மனு தாக்கல் செய்து முன் அனுமதி பெறாமல் சாட்சியம் அளிப்பது சட்டப்படி செல்லாது என்றாலும், சரியல்ல.

4) தாவா சொத்து தற்போது எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. தாவா சொத்தின் விஸ்திரம் எவ்வளவு என்றால், 15 சென்டுகள் ஆகும். தாவா சொத்தின் செக்குபந்தி விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் கிழபுறம் செங்கோடனது நிலம் உள்ளது. மேற்கு, வடக்கு, தெற்கு புறங்களில் எங்களது வேறு நிலம் உள்ளது.

5) தாவா சொத்தின் மூலப்பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால், தாவா சொத்தை என் தாயார் கிரையம் பெற்றதால் அவர் பெயரில் உள்ளது. என் தாயார் பெயர் பழனியம்மாள். தேவராஜ் என்பவர் யார் என்றால் என் சகோதரர். என் மாமனார் பெயர் என்னவென்றால் ராமசாமி ஆகும்.

6) 1ம் பிரதிவாதி செங்கோடன் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.49/2010 என்ற வழக்கை என் மீதும், என் கணவர், என் மாமனார், என் தாயார், என் சகோதரர் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதி செங்கோடன் 8.88 ஏக்கர் நிலம் தனக்கு சொந்தமானது என விளம்புகை செய்ய பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான்.

7) மேற்படி 8.88 ஏக்கர் நிலத்திற்குள்தான் தற்போது இவ்வழக்கில் உள்ள 0.15 சென்ட் நிலம் அடங்கியுன்னது என்றால், சரியல்ல. இவ்வழக்கில் உள்ள 15 சென்ட் நிலம் தனியாக உள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும் மேற்படி அ.வ.எண்.49/2010 ல் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியுடன் மேற்படி 8.88 ஏக்கர் நிலத்தை அளந்தபோது அதற்குள்தான் தற்போது இவ்வழக்கில் உள்ள 0.15 சென்ட் நிலம் வருகிறது என அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

8) மேற்படி அ.வ.எண்.49/2010 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நசித்திட கோரி எங்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதற்கெதிராக மாண்புமிகு சென்னை உயர்

நீதிமன்றத்தில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு தள்ளபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு சரியாக நினைவில்லை.

9) 1ம் பிரதிவாதி எங்கள் மீது தாக்கல் செய்த அ.வ.எண்.49/2010 என்ற வழக்கு எங்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை மறைத்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளதை மறைத்து நான் இவ்வழக்கில் இடைக்கால உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்த மனுக்கள் எனக்கெதிராக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

(1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் கேட்டுகொண்டதற்கிணங்க வா.சா.2 ன் குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.